1980 பிப்ரவரி 11]

(ஆ) மேற்குறிப்பிட்ட பண்ணைகளால் மக்களுக்குக் கிடைக்கும் பலன்கள் பின்வருமாறு :—

1. அரசு பழப் பண்ணைகள்.—தரம் மிகுந்த மா, பலா, கொய்யா, சப்போட்டா, திராட்சை, பிளம் போன்ற பழ வகை நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு பயிரிடுவோர்க்குக் குறைந்த விலையில் அளிக்கப்படுகின்றன. இவை தவிர அழகு தரும் ரோஜா, மல்லிகை போன்ற பூஞ்செடி நாற்று கொடி வகைகளும் உற்பத்தி செய்யப்பட்டு தேவையுள்ளவர்களுக்கு நியாயமான விலையில் அளிக்கப்படுகிறது. மேலும் தரம் மிகுந்த பழங்கள் மற்றும் செடி வகைகளைக்குறைந்த செலவில் நவீன முறையில் உற்பத்தி செய்வது பற்றி செயல்விளக்கமும் பயிரிடுவோர்க்கு வழங்கப்படுகிறது.

2. மற்ற தனிப்பட்ட பழவகை மற்றும் பணப்பயிர் பண்ணைகள்.—முந்திரி, பைன் ஆப்பிள், மரவள்ளி கிழங்கு, சிறந்த வகை வாழை, மிளகு காய்கறி வகைகள் ஆகியவைகளின் விதை மற்றும் நாற்றுக்கள் உற்பத்தி செய்ய மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் தனித்தனிப் பண்ணைகள் உள்ளன. இவ்வகைச் செடிப்பண்ணைகளிலும் தரமான செடிகள், விதைகள் நவீன முறையில் உற்பத்தி செய்யப்பட்டு நியாயமான விலையில் பயிரிடுவோர்க்கு வழங்கப்படுகிறது. செயல்விளக்கம் மற்றும் உயர் ரக செடிகளை உற்பத்தி செய்வது பற்றிய தொழில் நுணுக்க ஆலோசனைகள் இங்குள்ள தோட்டக்கலை வல்லுநர்களால் வழங்கப்படுகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III.

[165ம் பக்கத்திலுள்ளஉடுக் குறியிடப்பட்ட வினா எண். 117-க்கான விடையைக் காண்க].

விவர அறிக்கை.

(அ) தமிழ்நாட்டில் தஞ்சை, திருச்சி, தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களும், சென்னை மாநகரமும் யாணைக்கால் வியாதி பரவும் வாய்ப்புள்ள பகுதிகளாகும். இந்த பகுதிகளில் இந்நோயின் விகிதம் 6 : 4 அளவு விழுக்காடு என்று மதிப்பிடப்படுகிறது.

[1980 பிப்ரவரி 11

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் தேசிய யானைக்கால் தடுப்புத் திட்டத்தின் கீழும், கொசு தடுப்புத்திட்டத்தின் கீழும் இருபது இடங்களில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(1) கொசுப்புழு பெருக்கத்தைத்தடுக்க கொசுப்புழு தடுப்பு எண்ணெய் (Mosquito Laroicidal oil) தெளித்தல்.

(2) நோயின் தன்மை கண்டறிய தாக்குண்டவர்களின் இரத்தத்திவிலைகள் சேகரித்து ஆய்வு செய்தல்.

(3) பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதோடல்லாமல் மற்றவர்களுக்கு இந்நோய் பரவாமல் தடுத்தல்.

கோவை மாவட்டம் யானைக்கால் நோய் பரவும் பகுதியில்லை. ஆகையால் யானைக்கால்நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கும் பிரச்சினை இல்லை.

(இ) அய்யப்பாட்டிற்குரிய பகுதிகளில் பூச்சியியல் வல்லுனர்களால் ஒரு விரிவான கணிப்பு (Survey) செய்யப்பட்டு, அங்கு யானைக்கால் நோய் பரப்பும் கொசுக்கள் உள்ளதா, அப்படியாயின் அக்கொசுக்களின் அடர்த்தி எவ்வளவு என்று அறியப்படும். நோயின் விகிதம் அய்ந்து அளவு விழுக்காட்டிற்கு மேலும் பாதிக்கப்பட்ட பகுதியின் மக்கள் தொகை 20,000க்கு மேற்பட்டால், அங்கு தேசிய யானைக்கால் தடுப்புத்திட்டம் நிறைவேற்றப்படும். மற்ற பகுதிகளில் சாதாரண கொசு தடுப்புத்திட்டம் உள்ளாட்சிகளால் நிறைவேற்றப்படும்.

(ஈ) தற்போது யானைக்கால் வியாதியினால் பாதிக்கப்பட்டு, கால் பெரியதாக வீங்கியவர்களுக்கு அறுவை சிகிச்சை மூலம் அதிகப்படியான சதைகளையும், சதை திசுக்களையும் நீக்குவதைத் தவிர, வேறு சிகிச்சை முறைகள் இல்லை. இந்த வியாதியினால் பாதிக்கப்பட்டோர் இதற்காக அரசு மருத்துவ மனைகளை நாடலாம். இந்த வியாதிக்கு ஒரு தீவிரமான சிகிச்சை முறைக்கான உயர்மட்டத்தில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

இணைப்பு IV.

[180ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா 204-க் கான விடையைக் காண்க].

விவர அறிக்கை.

சென்ற ஆண்டு பயிற்சி மருத்துவர் மற்றும் பிறர் வேலை நிறுத்தத்தின் போது மருத்துவமனைப் பணிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டில் பயிற்சி பெறா